FWC

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**தவணைப் பரீட்சை, யூலை - 2019**

**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, July - 2019**

| தரம் :- 12 (2020) | இலங்கை வரலாறு | புள்ளித்திட்டம் |
|---|---|---|



## பகுதி – I

| | | | |
|---|---|---|---|
| 1) 1 | 6) 3 | 11) 2 | 16) 5 |
| 2) 5 | 7) 5 | 12) 1 | 17) 4 |
| 3) 5 | 8) 2 | 13) 5 | 18) 3 |
| 4) 2 | 9) 5 | 14) 3 | 19) 2 |
| 5) 1 | 10) 4 | 15) 4 | 20) 5 |

## பகுதி - II - பகுதி A

1) படம் குறித்தல்

## பகுதி B

2)

1) இயற்கைத் துறைமுகங்கள்
   - பிரதான துறைமுகங்கள் மகாதீர்த்தம், கோகண்ண, ஜம்புகோளப் பட்டினம், கொடவாய.
   - அரசியல் ரீதியான முக்கியத்துவம்.
     - ஆரியர் வருகைதரல்.
     - உதாரணம் - கோகண்ண வழியாகப் பத்தகச்சானாக் குழுவினர் வருகை தந்தமை. மகாதீர்த்தின் வழியாக சிங்கள அரசர்கள் இந்தியாவிலிருந்து படையுதவி பெறல். இளநாகன், முகலன் படையுதவி பெற்றமை.
     - மகாதீர்த்ததின் வழியாகப் பல ஆக்கிரமிப்புக்கள் நடைபெற்றமை. எடுத்துக்காட்டு :- தென்னிந்திய ஆக்கிரமிப்புக்கள் (எல்லாளன், பஞ்சதிராவிடர், இராஜேந்திரன் படையெடுப்பு)
   - பொருளாதார ரீதியான முக்கியத்துவம்.
     - வர்த்தகத்தின் பொருட்டுப் பல இனத்தவர் வருகை தந்தமை. (சீனர், அராபியர், உரோமர்)
     - வர்த்தகம் உயர்ந்த நிலையில் இருத்தல் ஊராத்தோட்ட, மகாதீர்த்தம் ஊடாக.
     - வர்த்தகம் நடைபெற்றமை. பொலன்னறுவைக்காலத்தில் வர்த்தகம் சிறப்பாக நடைபெறல், கோகண்ண முக்கியம் பெற்றிருத்தல்.
   - பண்பாட்டு ரீதியான முக்கியத்துவம்.
     - இந்தியாவுடான பண்பாட்டுத் தொடர்பில் ஜம்புகோளப் பட்டினம் முக்கிய இடம்பெறல், மகிந்தர், சங்கமித்தை வருகை.
     - கஜபாகு மன்னனின் காலத்தில் பத்தினி வழிபாடு இந்நாட்டிற்கு அறிமுகமாதல்.

2) மத்திய மலைகள்
   - மலைகள், ஆறுகள், நீர்நிலைகள், காடுகள் என்பனவற்றால் நிரம்பியிருத்தல்.
   - தனி அரசியல் அலகாக கண்டி இராச்சியம் காணப்பட்டமை.
   - விசேட ஆக்கிரமிப்பின் போதும் உள்நாட்டுக் கலவரங்களின்போதும் பாதுகாப்பான இடமாக அமைதல்.
   - ஏனைய பிரதேசங்களில் அரசியல் குழப்பங்கள் ஏற்படும் போது அங்குள்ள அரசர்கள் புகலிடம் தேடி வரல். (துட்டகைமுனு, வலகம்பா போன்றோர்).
   - மத்திய மலைகள் காரணமாக ஆக்கிரமிப்பாளர்கள் நாடு முழுவதையும் கைப்பற்றுதல் தடுக்கப்படல்.
   - பகைவரை முறியடிக்க பாதுகாப்பு இடமாக இருத்தல்.
   - அரசியல் ரீதியாக ஒன்றிணைவதற்குத் தடையாக இருத்தல்.

3) நதிகள்
   - மத்திய மலைநாட்டிலிருந்து நாட்டின் பல பாகங்களுக்கும் பாய்ந்து செல்லும் நதிகளின் முக்கியத்துவம், அதன் மூலம் குடியேற்றங்கள் பரவல், விவசாய விருத்தி ஏற்படல்.
   - நதிகளை மையமாகக் கொண்டே முதல் குடியேற்றங்கள் ஏற்படல். உதாரணம் : கதம்பநதி, கோணநதி, கல்காநதி
   - தலைநகரங்களை அமைப்பதில் நதிகளின் பங்களிப்பு.
   - விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரம் உருவாகுதல்.

agaram.lk

- எல்லைகள் அமைக்கவும், பாதுகாப்பிற்கும் நதி பயன்படுத்தப்படல்.
  உதாரணம் : மகாவலி கங்கை
- போக்குவரத்திற்குப் பயன்படல்.
- வர்த்தக மத்திய நிலையங்கள் தோன்றுதல்.

4) சமவெளிகள்

- ஆரம்பக் குடியேற்றங்கள் சமவெளிகளில் தோன்றுதல்.
- வடக்கு, தென்கிழக்கு சமவெளிகளை மையமாகக் கொண்டு இராசதானிகள் தோன்றுதல்.
- நீர்ப்பாசனத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரம் தோன்றுவதற்கு சமவெளிகள் உதவுதல்.

3) நீர்ப்பாசனத்துறை பொருளாதார நடவடிக்கையின் அடிப்படை அம்சமாக அமைதல்.

- அநுராதபுரத்தின் விவசாயம் - நெற்செய்கை முதலிடம்.
- இடையிடையே ஏற்பட்ட முன்னேற்றம்.
- வாவிகளின் தொழில்நுட்பம்.
- நீர்ப்பாசனம், பண்பாட்டின் ஏற்படுத்திய தாக்கம்.
- தென் ஆசியாவில் வேறு நாடுகளில் இல்லாதவாறு சிறப்பான தொழில்நுட்பம் காணப்படல்.
- பல திசைகளையும் நோக்கிச் சென்ற ஆற்றுநீரை ஒன்றிணைத்து நீர்ப்பாசனத்தை மேற் கொள்ளல்.
- கால்வாய்கள் மூலம் வாவிகளை இணைத்தல்.
- நதிகளுக்கு குறுக்காக அணை கட்டுதல்.

4)

1) அன்னியராதிக்கத்தினின்றும் இலங்கையினை விடுதலை செய்தமையும் அதனை இணைத்தமையும்.

1. உருகுணையை இணைத்தல்.
   - முதலாம் விஜயபாகு முதலில் கீர்த்தி என அறிமுகமாகியமை. உருகுணையை இணைப்பதற்கான செயற்பாட்டை முதலில் முன்னெடுத்துச் சென்றமை.
   - உருகுணையில் இருந்த பல்வேறு அரசியல் தலைமைத்துவத்திடமிருந்து ஆரம்பம் முதற்கொண்டே சவால்களை எதிர்நோக்கியமை. அவற்றை வெற்றி கொண்டமை.
   - கேசதாது, காசியப்பன், லோகேஸ்வரன் போன்ற உருகுணை ஆட்சியாளர்களுடன் போரிட்டுத் தன் அதிகாரத்தை உருகுணையில் நிலைநாட்டுவதற்காக நடவடிக்கைகளை மேற்கொண்டமை.
   - 1055 இல் 17 வயது நிரம்பிய கீர்த்தி உருகுணையில் நிலைநாட்டுவதற்காக நடவடிக்கை கதிர்காமத்தில் அரசனாதல்.

2. வெளிநாட்டு ஆட்சியாளருக்கு எதிராகச் செயற்படல்.
   - சோழர்களது ஆட்சியின் கீழிருந்த இராசரட்டை மக்கள் வரி செலுத்தாது ஏற்படுத்திய கலவரத்தை அடக்குவதற்கு இந்தியாவிலிருந்து வந்த சோழப்படை உருகுணையையும் ஆக்கிரமித்தது.
   - விஜயபாகுவின் ரவிதேச, சள என்ற இரு சிங்கள சேனாதிபதிகள் தமது சேனையுடன் சோழருடன் சேர்ந்து கொள்ளுதல்.
   - பலட்டுப்பான (பலுட்டகிரிய) என்ற இடத்தில் நடந்த சிங்கள – சோழருக்கிடையிலான போரில் முதலாம் விஜயபாகு வெற்றியடைந்ததுடன், பெரும் செல்வத்தையும் சோழர்களிடமிருந்து கைப்பற்றினான். பொலன்னறுவையையும் வெற்றி கொண்டான்.
   - கி.பி 1063 – 69க்கும் இடையில் இராஜேந்திரசோழன் மீண்டும் சோழரது ஆட்சியை நிலைநாட்டும் பொருட்டுப்படையொன்றை அனுப்புதல். அந்த படையால் விஜயபாகு தோற்கடிக்கப்பட்டு வாகிரிகலவிற்குப் பின்வாங்குதல்.
   - கேசதாது, காசியப்பனின் சகோதரர்களுள் ஒருவன் குத்தசாலயில் கலவரமொன்றை ஏற்படுத்ததுதல். அதனை அடக்குதல்.
   - மகாநாக குலவில் தன் படையை விஜயபாகு பலப்படுத்திக்கொள்ளல்.

agaram.lk

- இராஜேந்திரசோழன் இறந்ததால் ஏற்பட்ட சோழரது ஆட்சி வீழ்ச்சியைப் பயன்படுத்தி விஜயபாகு மூன்று மார்க்கமாக பொலன்னறுவையைத் தாக்கி 1 ½ மாதங்களில் சோழரை வெற்றி கொண்டான்.
- பொலன்னறுவையைத் தாக்கும் போது ரவிதேச, சள என்ற சிங்கள சேனாதிபதிகள் மீண்டும் சிங்களப் படையுடன் இணைந்து கொண்டனர்.
- கி.பி 1070 இல் சோழரைத் தோற்கடிக்க விஜயபாகு வெளிநாட்டவர் ஆட்சியின்று இலங்கையை மீட்டான்.
- சோழர் ஆதிக்கத்தினின்று இலங்கையை விடுவித்ததுடன் பல நடவடிக்கைகளை அவன் மேற்கொண்டான்.
- வீழ்ச்சியடைந்திருந்த விவசாயத்தை மேம்படுத்தினான்.
- இலக்கிய வளர்ச்சியின் பொருட்டுப் புலவர்களுக்குப் பரிசில்களாக கிராமங்களை வழங்கினான். ஏழைகளுக்கு உதவினான் உயிரினங்களுக்குப் பாதுகாப்பு வழங்கினான்.

2) சமய நடவடிக்கைகள்.

- பர்மாவிலிருந்து உபசம்பதாப் பிக்குகளை வரவழைத்து இங்கு மீண்டும் உபசம்பதா சடங்கினை நடாத்தினான். பிக்கு சாசனத்தை மீளமைக்கும் பொருட்டு பர்மாவிலிருந்து உதவி பெற்றான்.
- தேவையான திரிபிடக நூல்களைப் பர்மாவிலிருந்து கொண்டு வரச் செய்து திரிபிடகத்தை எழுதுவித்தான்.
- அரச மாளிகைக்கு வடக்கில் தலதா மாளிகையை அமைத்து வருடாந்தம் தலதா மாளிகை பூஜை நிகழ்வித்தான்.
- தலைநகரில் விகாரைகள் அமைத்து மூன்று பிரிவுகளையும் சேர்ந்த பிக்குகளை அங்கு தங்கச் செய்தான்.
- ஜம்புகோள, மெதிரிகிரி, மகியங்கனை, கசாகல்ல விகாரை, தேவிநுவர வேலகாம விகாரை என்பனவற்றுக்கு புனருத்தாரணம் செய்தான்.
- விகாரைகளைப் பராமரிப்பதற்குக் கிராமங்களை மானியமாக வழங்கினான். திஸ்ஸ மகாராமையில் சந்தகிரி விகாரை, தெவிநுவரயில் உருவெல விகாரை ஆகியவற்றை நிறுவினான்.
- அந்தரவிட்டிய, சங்காதகாமய, சிறிமண்டலகாமய ஆகிய கிராமங்களை வனவாசிப் பிரிவைச் சேர்ந்த பிக்குகளுக்கு வழங்கினான்.
- சிவனொளிபாத மலையைத்தரிசிக்க செல்வோருக்கு வசதிகள் செய்து கொடுத்தான். அம்பகமுவ கல்வெட்டின் படி சிவனொளிபாத மலையின் பராமரிப்புக்கு உதவுதல், பாதச் சுவட்டைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் பற்றி உள்ளது.

agaram.lk

5) கி.பி 1412 ல் றைகமவில் அதிகாரத்தைப் பெற்ற ஆறாம் பராக்கிரமபாகு கி.பி 1415 ல் ஜயவர்த்தனபுர கோட்டையைத் தன் தலைநகராக்கினான்.

- முதலாம் பராக்கிரமபாகுவிற்குப் பின் இலங்கையை ஒன்றிணைத்து, அதனை முன்னெடுத்துச் சென்ற பெருமையுடையவன்.
- இவனது காலத்தில் டெடிகமையில் ஆட்சி செய்த பராக்கிரமபாகு என்பவனின் குடும்பத்தில் திருமண உறவை ஏற்படுத்தி, டெடிகம உட்பட நான்கு கோறளை, மலைநாடு என்பவற்றின் ஆதிக்கத்தைப் பெற்றான்.
- உருகுணை, வன்னி ஆகிய பிரதேசங்களை ஆட்சி செய்தவர்களைத் தன் பக்கம் இணைத்துக் கொண்டான்.
- கி.பி 1449 ல் சப்புமல்குமாரனின் தலைமையில் படையொன்றை அனுப்பி யாழ்ப்பாண ஆரியச் சக்கரவர்த்திகளைத் தோற்கடித்து அப்பிரதேசத்தைக் கைப்பற்றினான்.
- நான்கு கோறளை, மலைநாடு, என்பவற்றில் ஏற்பட்ட கலவரத்தை அம்புலுகல குமாரனை அனுப்பி அடக்கினான்.
- மலைநாட்டில் அதிகாரம் பெற்றிருந்த விக்கிரமபாகுவை தன்வசப்படுத்தினான்.
- 1453 ல் தென்னிந்தியாவில் விஜயநகரப் பேரரசுடன் வெற்றி கொண்டான்.
- 1440 ல் வர்த்தகம் தொடர்பாக ஏற்பட்ட பிணக்கினால் தென்னிந்தியாவில் அதிகாரம் பட்டணத்தை ஆக்கிரமித்தான்.